**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.203/2021**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிச்சாமி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**27.03.2024**

**முதல் விசாரணை**

நான் பெரிய ஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு எனது தோட்டத்தில் உள்ள கிடையில் இருந்த 21 ஆடுகளை யாரோ திருடி கொண்டு சென்றுள்ளார்கள். இரவு 3 மணியளவில் நாய் ஊளையிடும் சத்தம்கேட்டு நான் சென்று பார்த்த போது யாரோ சிலர் எனது ஆட்டை டாடா ஏசி வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டார்கள். நான் விரட்டி சென்று அதில் ஒரு நபரை மட்டும் பிடித்துவிட்டேன். அந்த நபரையும் அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ, 1 ஆகும். திருடு போன ஆடுகளின் மொத்த மதிப்பு 1 1/2 லட்சம் இருக்கும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள ஆடுகள் தான் காணாமல் போனது ஆகும். அது சா.பொ.1 வரிசை ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.203/2021**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : காந்தி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**27.03.2024**

**முதல் விசாரணை**

நான் பெரிய ஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா ஆவார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரின் நானும் அ.சா.1ம் சேர்ந்து ஆட்டுக் கிடை போட்டு இருந்தோம். அப்போது அங்கு 21 ஆடுகளை யாரோ திருடி கொண்டு போனார்கள். டாடா ஏசி வண்டியில் ஆடுகளை ஏற்றிக் கொண்டு செல்வதாக ஒருவர் சொன்னதின் பேரில் எங்களுக்கு ஆடு திருடு போனது தெரிய வந்தது. நாங்கள் அவர்களை விரட்டி சென்று எங்கள் ஆடுகளை மீட்டுவிட்டோம். இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**